# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# ஆண்டிறுதிப் பரீட்சை 2020

ஆண்டு: 8 திகதி: 21.11.2020

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்கள்: திருமதி. மாலினி சோமாஸ்கந்தன்
செல்வி. நிஷிதா ஸ்ரீதரன்

மாணவர் பெயர்: ________________________________

| வினாக்கள் | வினா புள்ளி | பெற்ற புள்ளி |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 20 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 10 | |
| வினா 5 | 10 | |
| வினா 6 | 25 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**தரப்பட்ட பகுதியை வாசித்து வினாக்களுக்கு பதில் எழுதுக**

# முயற்சி திருவினை ஆக்கும்

கண்ணன் அவனது பெற்றோருக்கு ஒரே பிள்ளை. வசதியான குடும்பம். அவன் தந்தை வேலு, கண்ணனை நன்கு படிக்க வைத்து பெரிய அறிவாளியாக்க வேண்டும் என்று விரும்பினார். ஆனால் கண்ணனுக்கோ படிப்பு என்றால் வேப்பங்காயாகக் கசந்து அவன் விளையாட்டுப் பிரியனாக இருந்தான்.

கண்ணனை பெற்றோர் படி படி என்று வற்புறுத்தியும் ஒரு பலனும் அளிக்கவில்லை. பாடசாலையில் வகுப்பு ஆசிரியரும் தலைமை ஆசிரியரும் கண்ணனுக்கு சரியாகப் படிப்பு வராவிட்டால் பாடசாலையிலிருந்து விலக்கி விடுவோம் என்று பயமுறுத்தினர். கண்ணனின் நண்பர்கள் எல்லாம் நன்கு படிக்கும் போது அவன் மட்டும் இப்படி இருக்கிறானே என்று அவனது தந்தை வேலு கவலை அடைந்தார்.

அவ்வருடம் நடந்த பரீட்சையில் கண்ணன் சித்தியடையவில்லை. வீட்டில் அவனது பெற்றோர் நிச்சயம் கண்டிப்பார்கள் என்று பயந்து யாரிடமும் சொல்லாமல் வீட்டை விட்டு வெளியேறினான்.

வெகுதூரம் நடந்ததால் காட்டின் எல்லைப் பகுதியை அடைந்து, மிகுந்த களைப்பின் காரணமாக ஒரு மரத்தடியில் படுத்து விட்டான். கண்ணனின் பெற்றோர் அவனைக் காணாமல் கவலை அடைந்தனர். அவன் படிக்காவிட்டாலும் பரவாயில்லை, வீட்டுக்கு வந்து விட்டால் போதும் என்று கடவுளை வேண்டினர்.

காட்டின் வழியாக வந்த பெரியவர் ஒருவர் கண்ணன் மயக்கமடைந்து கிடப்பதை பார்த்து அவனுக்கு முதல் உதவி செய்தார். தன்னிடமிருந்த தண்ணீரையும் ஆகாரத்தையும் கொடுத்து மயக்கத்தைத் தெளிவித்தார். கண்விழித்த கண்ணன், தனக்கு படிப்பு வராததால் தன் பெற்றோர் படும் வேதனையை பார்க்காமல் வீட்டை விட்டு வெளியேறி விட்டதாக கூறி கதறி அழுதான்.

பெரியவர் அவன் தந்தை வேலுவுக்கு மிகவும் வேண்டியவர். அவர் ஒரு ஓய்வு பெற்ற தமிழாசிரியர். அவர் “தம்பி! கண்ணன் கவலைப்படாதே. தோல்வியே வெற்றிக்கு முதல் படி. மனம் தளர்ந்து விடாதே. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார். ஆரம்பத்தில் தோல்வியுற்றுப் பின்னர் வெற்றி அடைந்தவர்கள் பற்றி கூறுகிறேன் கேள்” என்றார்.

“ஒரு நாட்டு அரசன் அவனது எதிரிகளால் பலமுறை தோற்கடிக்கப்பட்டான். உயிருக்குப் பயந்து மலையடிவாரத்தில் ஒரு குகையில் ஒளிந்து கொண்டான். அப்போது குகையின் வெளி நுழைவாயிலில் ஒரு சிலந்தி கூடு கட்ட முயன்று கொண்டிருந்தது. ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு இளையை இழுத்து செல்லும் போது அறுந்து விழுந்தது. இப்படிப் பலமுறை மீண்டும் மீண்டும் முயன்று சிலந்தி கூட்டைக் கட்டி முடித்தது. அதைப் பார்த்த அந்த அரசன் உற்சாகத்துடன் எழுந்தான். துடிப்போடு தனது மக்களை சந்தித்து அவர்களின் உதவியோடு எதிரி எதிர்பாராத சமயத்தில் தாக்கி அபார வெற்றி பெற்றான்.

அதேபோல் அமெரிக்க அதிபராக இருந்த ஆபிரகாம் லிங்கன் அடைந்த தோல்விகள் ஒன்று இரண்டு அல்ல. இளமையில் வறுமை. பல முறை தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவினார். இருப்பினும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. முடிவில் அமெரிக்க ஜனாதிபதியாக உயர்ந்தார். இது வரலாறு.

பார்த்தாயா கண்ணா. வருத்தப்படாதே. சோர்ந்து உட்கார்ந்து விடக்கூடாது. நான் உனக்குப் பயிற்சி அளிக்கிறேன்" என்று கூறி கண்ணனை அவனது வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அவனைக் கண்ட பெற்றோர் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். தமிழ் ஆசிரியர் எல்லா விபரங்களையும் கூறி, "வேலு, இனிமேல் கண்ணனின் முன்னேற்றத்தைப் பார். அவன் வாழ்வில் மிக உயர்ந்த நிலையை அடையப் போகிறான்" என்றார். கண்ணனின் பெற்றோர் சந்தோசமடைந்து ஆசிரியரை உபசரித்து பெருமை படுத்தினர்.

1) இக்கதையில் வரும் பழமொழி ஒன்றையும் அதன் கருத்தையும் கூறுக?

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

2) வகுப்பு ஆசிரியரும் தலைமை ஆசிரியரும் கண்ணனிடம் கூறியது என்ன?

______________________________________________

______________________________________________

3) கண்ணன் ஏன் வருத்தப்பட்டான்? அவன் என்ன செய்தான்?

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

4) ஆசிரியர் கூறிய கதையில் வரும் அரசனுக்கு பாடம் புகட்டிய பிராணி எது?

______________________________________________

______________________________________________

5) இப்பகுதியில் கூறும் அடுக்குச் சொல் ஒன்றை கூறுக?

______________________________________________

______________________________________________

- BLANK PAGE –

| வினா இல | 2 | புள்ளிகள் | 20 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி 5 சொற்களுக்குக் குறையாமல் வசனம் எழுதுக**

1) வருக வருக

2) நோய்

3) கமகம

4) கலீர் கலீர்

5) நூல் நிலையம்

6) வண்ண வண்ண

7) விளம்பரம்

8) விமர்சனம்

9) கலாச்சாரம்

10) தகவல் சாதனம்

| வினா இல | 3 | புள்ளிகள் | 15 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**70 சொற்களுக்குக் குறையாமல் கடிதம் எழுதுக.**

Covid 19 (கோவிட்19) இவ்வருடம் உமது பாடசாலையில் ஏற்படுத்திய படிப்பு மாற்றங்களையும் அதனால் நீர் எதிர்கொண்ட சவால்களையும் பற்றி வெளிநாட்டில் உள்ள நண்பருக்கு கடிதம் எழுதுக.

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் துண்டுப் பிரசுரத்தை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

பிள்ளைகளே!

கண்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறீர்களா?

சில அறிவுரைகள் . . . .

நமது கண்களில் தூசி விழுந்ததும்,

- எந்தக்காரணம் கொண்டும் கண்களை கசக்காதீர்கள். கண்பார்வை பறிபோக நீங்களே காரணம் ஆகி விடுவீர்கள்.
- எந்தக் காரணம் கொண்டும் எந்தப் பொருளையாவது கூர்ந்து அவதானிக்கும் போது கண்களில் கண்ணீர் வந்தால் உடனே அச் செயலை நிறுத்தி விடுங்கள்.
- வெளிச்சம் குறைவாக இருக்கும்போது வாசிக்கும் பழக்கம் பார்வைக் கோளாறு உண்டாகக் காரணம் ஆகலாம்.
- வாகனங்களில் பயணம் செய்யும்போது வாசிக்கக் கூடாது. கண்கள் சிரமப் படக் கூடும். இதனால் பார்வைக் கோளாறு ஏற்பட வாய்ப்புண்டு.
- புத்தகம் வாசிக்கும் போது கண்களுக்கு குறைந்தது ஒரு அடி தூரத்தில் புத்தகத்தை வைத்து வாசிப்பதே நல்லது.

சிறு விடயங்களிற்குக் கூட கவனமாக இருந்தால்தான் கண்களை காப்பாற்ற முடியும். சிறுவயதில் இருந்தே நல்ல அறிவுரைகளைப் பின்பற்றுவோம்!
கண்களை பாதுகாப்போம்!

கண்களை பாதுகாக்கும் நண்பர்கள் அமைப்பு

1) துண்டுப்பிரசுரம் எதைப் பற்றி விவரிக்கிறது?

2) இப் பிரசுரத்தை வெளியிட்டவர் யார்?

3) கண்களில் தூசு விழுந்தால் என்ன செய்யக்கூடாது?

4) புத்தகம் வாசிக்கும் போது கண்ணுக்கும் புத்தகத்திற்கும் குறைந்தது எவ்வளவு தூரம் இருக்க வேண்டும்?

| வினா இல | 5 | புள்ளிகள் | 10 | பக்கம் | 9 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் வினாக்களுக்கு ஏற்ற பதிலைக் கூறுக.**

1) தமிழ் கலாச்சார நிகழ்வுகள் சிட்னியில் நடைபெறுவதால் மாணவர்களாகிய நீங்கள் அடையும் பயன்கள் இரண்டைக் கூறுக

2) கோபத்தை குறைப்பதற்கு வழிமுறைகள் இரண்டு கூறுக

3) நூல்களை வாசிப்பதனால் ஏற்படும் இரண்டு பயன்கள் கூறுக

4) கட்டுரை எழுதும் போது அவதானிக்க வேண்டியவை பல. அதில் இரண்டை கூறுக

| வினா இல | 6 | புள்ளிகள் | 25 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**கீழேயுள்ள தலைப்புக்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1) பார்த்து மகிழ்ந்த திரைப்படம் பற்றிய விமர்சனம் எழுதுக
2) அவுஸ்திரேலியாவில் முதியோர் பராமரிப்பு (குறிப்பு: நீர் படித்த பாடத்தை அடிப்படையாகக் கொண்டு வினாவிற்கு விடை எழுதுக.)
3) தனிநாயகம் அடிகளார் தமிழுக்கு செய்த தொண்டு